போக்குவரத்து துறை

அனுப்புநர்

முனைவர் மூ. இராசாராம்,
போக்குவரத்து ஆணையர்,
சேப்பாக்கம்,
சென்னை-5.

பெறுநர்

அனைத்து சரக அலுவலர்கள்,
அனைத்து வட்டாரப் போக்குவரத்து அலுவலர்கள்,
அனைத்து சோதனைச் சாவடி அலுவலர்கள்.

ந.க.எண். 16603/அ5/2012 நாள்: 23.02.2012

அய்யா,

பொருள்: மோட்டார் வாகனம் - கல்வி நிறுவனம் மற்றும் தனியார் பணி வாகனங்களுக்கு தற்காலிக அனுமதிச் சீட்டு வழங்கும்போது - 1974-ம் வருடத்திய தமிழ்நாடு மோட்டார் வாகன வரிச்சட்டம் (திருத்தச் சட்டம்) 32/10-ன்படி வரிவசூல் செய்ய – 01.01.2011 முதல் அமுல்படுத்தப்பட்டது - தொடர்பாக.

பார்வை: 1. அரசு ஆணை எண். 1086/உள் (போ-1) துறை, நாள்: 30.12.2010.

2. இவ்வலுவலக கடித எண். அ5/16603/2010, நாள்: 04.02.2011.

-----

பார்வையில் காணும் இவ்வலுவலக கடிதத்தை தொடர்ந்து வெளிமாநில கல்வி நிறுவன வாகனங்கள் மற்றும் தனியார் சேவை வாகனங்களுக்கு தற்காலிக அனுமதி கோரி மனுக்கள் பெறப்படுகின்றன. தற்காலிக அனுமதிக்காக இவ்வலுவலகத்தை அனுகுவதை தவிர்க்கும் பொருட்டு 1989-ம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகன விதி 147(2) (a)-ன்படி தமிழகத்திற்குள் நுழையும் கல்வி நிறுவன மற்றும் தனியார் சேவை வாகனங்களுக்கு அவற்றின் தேவையின் அடிப்படையில் 7 நாட்களுக்கு மிகாமல் தற்காலிக அனுமதி வழங்குமாறு சோதனைச் சாவடி இயக்கூர்தி ஆய்வாளர்கள் (தொழில்நுட்பமற்ற) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இவ்வாறு தற்காலிக அனுமதி வழங்கும் நிகழ்வுகளில் 1974-ம் வருட தமிழ்நாடு மோட்டார் வாகனச் சட்டம் முதல் பட்டியலில் கண்டுள்ள பத்தி 8-ல் திருத்தப்பட்டுள்ள தற்காலிக அனுமதிக்கான கீழ்க்காணும் வரி விகிதத்தில் வரி வசூலிக்கப்பட வேண்டும்.

1. கல்வி நிறுவன வாகனங்கள் தற்காலிக அனுமதி பெற்று தங்கள் நிறுவன மாணவர்கள் மற்றும் பணியாளர்களை ஏற்றிச் செல்லும் போது, வரி ஏழு நாட்களுக்கு அல்லது அதற்கு குறைந்த நாட்களுக்கு இருக்கை ஒன்றிற்கு ரூ.30/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும்.(ஓட்டுநர் நீங்கலாக).

2. தனியார் சேவை வாகனங்கள் தற்காலிக அனுமதி பெற்று தங்கள் நிறுவன பணியாளர்களை ஏற்றிச் செல்லும்போது வரி ஏழு நாட்களுக்கு அல்லது அதற்கு குறைந்த நாட்களுக்கு இருக்கை ஒன்றிற்கு ரூ.90/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும். (ஓட்டுநர் நீங்கலாக).

3. கல்வி நிறுவன வாகனங்கள் மற்றும் தனியார் சேவை வாகனங்கள் தற்காலிக அனுமதி பெற்று வேறு நபர்களை ஏற்றிச் செல்லும்போது வரி நாள் ஒன்றிற்கு இருக்கை ஒன்றிற்கு ரூ.30/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும் (ஓட்டுநர் நீங்கலாக).

இதனை கவனத்தில் கொண்டு சோதனைச் சாவடிகளின் பொறுப்பில் உள்ள இயக்கூர்தி ஆய்வாளர் (தொழில் நுட்பமற்ற) அவர்கள் எவ்வித புகார்களுக்கும் இடம் கொடாமல் செயல்படுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

ஓம்/- மூ. இராசாராம்,
போக்குவரத்து ஆணையர்,